# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 09 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் போது கணக்குகளின் பெறுமதிகள் கிட்டிய ரூபாக்களில் காட்டப்படவேண்டிய போதிலும் வருமானம் மற்றும் செலவுக் கணக்குகள் அதற்கிணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளுக்கான கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 மே 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய கணக்குகள் புதிய படிமுறைக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது எந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது என்பதுவும் அந்த மாற்றங்கள் தொடர்பாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.5 ஆம் பந்தியின் படி மீளாய்வாண்டில் சபையின் இருப்பு பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்படாததுடன் கிரயம் அல்லது தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதியே கணக்குகளில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,315,953 தொகையான புத்தகப் பெறுமதி கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் சேகரிப்புக்களுக்காக அமுல்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த ரூபா 419,861 கூட்டுமொத்தமான வருமானம் பொருத்தமற்ற முறையில் அட்டுறு செலவுகளின் கீழ் கணக்குவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 204,760 கூட்டுமொத்தமான மீண்டுவரும் செலவுகள் காணி மற்றும் கட்டிடங்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(இ) செயற்திட்ட பணத்தில் 60% ஆன ரூபா 1,742,520 தொகை 2010 பெப்ரவரி 10 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்ததுடன் அது பொருத்தமற்ற முறையில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச போதைப் பொருள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - 1995 என்ற செயற்திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.4 தொங்கல் கணக்கு

2005 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளில் காட்டப்பட்டு வருகின்ற ரூபா 502,438 தொகையான தொங்கல் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,128,068 கூட்டுமொத்தமான முற்பண மீதியில் 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,832,060 பெறுமதியான 17 மீதிகளும் ரூபா 1,335,034 கூட்டுமொத்தமான கடன்கொடுத்தோரில் 07 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,271,034 பெறுமதியான 46 மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 2,128,068 தொகையான முற்பணங்கள், ரூபா 5,730,039 தொகையான கடன்பட்டோர், ரூபா 1,335,034 தொகையான கடன்கொடுத்தோர் தொடர்பான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததுடன் ரூபா 1,831,733 தொகையான காசு மற்றும் வங்கி மீதிக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் கோரப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டில் வழங்கப்பட்டு அந்த ஆண்டிற்கான கணக்குகளில் செலவுகளாகச் செம்மையாக்கப்பட்ட ரூபா 162,000 தொகையான முற்பணங்கள் 2012 யூன் 06 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் பெப்ரவரி மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதம் வரை வழங்கப்பட்ட ரூபா 330,900 தொகையான குறித்த நோக்கத்திற்கான முற்பணங்கள் 2012 யூன் 06 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. அவை தீர்த்துவைக்கப்படாத காலம் 03 மாதங்களிலிருந்து 27 மாதங்கள் வரையான வீச்சுடையதாக இருந்தது.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(8) ஆம் பிரிவு | 13(7)(ஏ) அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள் அந்த அறிக்கை சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட |

திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தெரியப்படுத்தப்படவேண்டிய போதிலும் 2011 மார்ச் 30 ஆந் திகதி 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான 13(7)(ஏ) அறிக்கை தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

(i) II ஆம் அத்தியாயத்தின் 9.1 மற்றும் 9.1.1 ஆம் பிரிவுகள்

அரசாங்கத்திலிருந்து ஓய்வுபெற்ற நபர் ஒருவர் அரசாங்க சேவையிலுள்ள பதவி ஒன்றில் மீண்டும் சேவையில் ஈடுபடுவதற்கு அல்லது அரசாங்க கூட்டுத்தாபன சேவையில் ஈடுபடுவதற்கு மற்றும் 60 வயதினைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நபர் ஒருவர் அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபன சேவையில் ஈடுபடுவதற்கு அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஒப்பந்த அடிப்படையின் கீழ் 4 நிலைய முகாமையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

(ii) vi ஆம் அத்தியாயத்தின் 2.10 ஆம் பிரிவு

நியமனம் மற்றும் அது தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க நிதிப்பிரமாணம்

(i) 395(ஆ) மற்றும் (இ)

ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் உள்ளவாறான கொடுக்கல்வாங்கல்களின் நிலைமை தொடர்பாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள்

| | | |
|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 454 (i) | பொருள் இருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 772 | 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் இடம்பெறவேண்டிய காலி கிளையின் விற்றுத்தீர்த்தல் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை | வருகைகள் மற்றும் வெளிச்செல்லல்களைப் பதிவுசெய்வதற்காக விரல் அடையாளத்தினைப் பதிவுசெய்யும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவிலலை. |
| (உ) | 2009 யூன் 01 ஆந் திகதிய 30(1) ஆம் இலக்க முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | 2009 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் நிறைவேற்றுத் தரம் தவிர்ந்த ஏனைய தரங்களின் சம்பள ஏற்ற பெறுமதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 மார்ச் 16 ஆந் திகதி வரையும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5:1:3 ஆம் பந்தி | பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு வரைபடத்தின் பிரதி வருடாந்த பாதீட்டுடன் ஒவ்வொரு நிதி ஆண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத்திறைசேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 18,676,865 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 14,873,999 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 3,802,866 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் மானியம் ரூபா 15,894,261 ஆல் அதிகரித்திருந்தும் ஒப்படைப்பு அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியணியினரின் சம்பளம் ரூபா 11 மில்லியனாலும் பாதுகாப்புக் கட்டணம், நிலையத்தின் குத்தகை வாடகை, வாகனப் பராமரிப்பு, அச்சிடலும் எழுதுகருவிகளும் என்பன ரூபா 1 மில்லியனாலும் அதிகரித்திருந்தமை நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்குத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் இரண்டு உத்தியோகத்தர்களுக்குரிய இடர் கடன் பணம் ரூபா 353,900 கூட்டு மொத்த தொகை உண்மையிலேயே கிடைத்திருந்தும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 5 மாதங்கள் மற்றும் 8 மாதங்களுக்கிடையில் அப்பணம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளிநாட்டுப் பயணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஒக்டோபர் 11 ஆந் திகதிய நிதி திட்டமிடல் அமைச்சு செயலாளர் மற்றும் திறைசேரி செயலாளரின் எம்எப்பீ/01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அமையச்

செலவுப் படியாக ஒரு நாளைக்கு அமெரிக்க டொலர் 30 படி செலுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் உத்தியோகத்தர்களது வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக அமெரிக்க டொலர்கள் 260 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவின் (i) ஆம் பந்தியின் பிரகாரம் படிகள் செலுத்தப்படும் சந்தர்பத்திலேயே அவற்றினை செலவாகக் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டில் வெளிநாடு சென்றோர்களுக்காக ரூபா 125,543 கூட்டு மொத்தமான கொடுப்பனவுகள் மீளாய்வாண்டிற்கு 2012 மார்ச் வரையும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2010 மே 10 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்ட விரோத வியாபாரத்திற்கு எதிரான ஒழுங்குபடுத்தல் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 மே 04 ஆந் திகதியிலிருந்து சபைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 2010 இன் 01 ஆம் இலக்க புத்தாக்குனர் கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு தனியாக திறைசேரி மானியம் கிடைத்திருக்காததுடன் திறைசேரியின் நிதிகளின் மூலம் அனைத்து செலவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புத்தாக்குனர் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் தலைவராக சபையின் தலைவர் உரிய வர்த்தமானியின் 2(1) மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வர்த்தமானியின் 3(1)(2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் அந்த அதிகாரசபை சபையினுள் தோற்றுவிக்கப்பட வேண்டும் எனவும் அதன் அனைத்து நடவடிக்கைகளும் சபையின் மூலம் ஒருங்கினைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தும் சபையின் தலைவருக்க அதிகார சபையின் மூலம் தலைவரின் படியாக ஒரு மாதத்திற்கு ரூபா 25,000 படி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சபையின் இறுதிக் கணக்குகளுடன் அதிகார சபையின் கணக்குகள் ஒருங்கணைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வாடிக்கையாளர் விபரங்கள்**

(அ) சபையில் 5 போதைப் பொருள் தடுப்பு மற்றும் சிகிச்சை நிலையங்கள் பேணப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டின் போது அந்த நிலையங்களிலிருந்து ஆலோசனை சேவைகளைப் பெற்ற மொத்த சேவை நாடுனரின் எண்ணிக்கை 1849 ஆகவும் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சேர்த்துக் கொண்ட சேவை நாடுனரின் எண்ணிக்கை 1017 ஆகவும் காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் அது 2313 ஆக இருந்தது.

(ஆ) சிகிச்சைக்காக சேர்த்துக் கொண்ட சேவை நாடுனர்களில் 126 பேர் அல்லது 12.39% ஆனோர் பழைய சேவை நாடுனராகும். சிகிச்சைகளைப் பூர்த்தி செய்த சேவை நாடுனரின் எண்ணிக்கை 316 அல்லது 31.07% ஆக இருந்ததுடன் அவ்வாறு சிகிச்சைகளைப் பூர்த்தி செய்யாது வெளியேறியவர்களின் எண்ணிக்கை 591 அல்லது 58.11% ஆக இருந்தது.

(இ) ஒரு சேவை நாடுனர் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 76,044 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 77,876 ஆக இருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நவதிகன்னயினைத் தவிர்த்து தலங்கம, கண்டி, காலி, ஆகிய சேவை நிலையங்களில் சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்ட சேவை நாடுனர்களில் குறிப்பிடத்தக்க அளவு குறைவு அவதானிக்கப்பட்டதுடன் அனைத்து நிலையங்களிலும் தங்கி சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட மொத்த சேவை நாடுனர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1296 ஆல் அல்லது 56% ஆல் குறைவடைந்திருந்தது.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபையின் மேலே குறிப்பிடப்பட்ட நிலையங்களில் இடவசதிகள் காணப்பட்டும் ரூபா 1,185,613 கூட்டு மொத்தமான வருடாந்த செலவினை மேற்கொண்டு 53 சேவை நாடுனர்களுக்காக கொட்டாவையில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையத்தினைப் பேணுவதற்குப் பதிலாக அந்த இடவசதிகளைப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு முயற்சி எடுத்தல் மிகவும் பொருத்தமானது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(i) நவதிகன்தய நிலையம் அமைந்துள்ள 18 ஏக்கர் காணியில் 769 தென்னை மரங்கள் காணப்பட்டதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட தேங்காய் வருமானம் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 649,279 ரூபா 886,907 மற்றும் ரூபா 999,291 ஆக இருந்தன.

இதற்கிணங்க கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது தேங்காய் விளைச்சல் படிப்படியாகக் குறைவடைந்திருந்ததுடன் முறைப்படியாக பசளை இடப்பட்டு பராமரிப்பதன் ஊடாக சிறப்பான விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

(ii) சபையின் உத்தியோகத்தர்களது சம்பளங்களில் மாற்றங்கள் செய்வதற்காக வெளி ஆலோசகர் ஒருவரின் உதவியினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 60,000 செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் கணக்காளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2011 ஒக்டோபர் மாதம் இரண்டு செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்களை வெளியிடுவதற்காக 2011 திசெம்பர் மாதம் ரூபா 53,491 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த ஆட்சேர்ப்புக்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது அம்பாறை, பேருவளை, குருநாகல், அனுராதபுரம், இரத்தினபுரி ஆகிய மாவட்ட அலுவலகங்களுக்காக ரூபா 870,000 கூட்டு மொத்த தொகை வாடகையாகவும், குருநாகல் அலுவலகத்திற்கு திரைச் சீலைகள் போடுவதற்காக ரூபா 28,298 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த மாவட்ட அலுவலகங்களை 2012 ஆம் ஆண்டின் போது விளைவற்றவை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதத்தில் தேசிய விளையாட்டு நிதியிலிருந்தும் பொலிசாரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 10,191,349 தொகை செலுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட ஜீசீஎம்எஸ் பரிசோதனை இயந்திரம் (Hilgh Performance Capillory Gas Quadrupole Mass Spectrome) உரிய பரிசோதனைகளை மேற்கொள்ளாமையின் காரணமாக 2012 யூன் 06 ஆந் திகதி வரை குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் காலி நிலையத்தில் 7 கட்டில்களும் 7 மெத்தைகளும் 28 கதிரைகளும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 3.5 ஆளணி நிர்வாகம்

மீளாய்வாண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 217 ஆக இருந்ததுடன் நிரந்தர ஆளணியினர் 111 ஆகும். இதற்கு மேலதிகமாக ஒப்படை அடிப்படையில் 86 நபர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கான சம்பளங்களாக ரூபா 13,431,054 கூட்டு மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

## 3.6 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்கு சொந்தமாக மோட்டார் சைக்கிள்களை உள்ளடக்கி 24 வாகனங்கள் காணப்பட்டதுடன் அதில் 3 வாகனங்கள் பய்னபடுத்தப்படாது காணப்பட்டன.

(ஆ) ஆண்டின் போது ரூபா 286,270 தொகை பயன்படுத்தப்படாத மூன்று வாகனங்களின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 457,330 தொகையானது 1987 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ஜீப் வண்டியின் இன்ஜினை பழுதுபார்ப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தமை சிக்கனமற்றவை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) உலக சுகாதார அமைப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 05 வாகனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 02 வாகனங்கள் மீளாய்வாண்டு வரையும் சபைக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு முடியாதிருந்தது.

## 4. கணக்களிதன்மையும் சிறந்த ஆளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

சபையின் கணக்குகள் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதிய 14(2)(சீ) வரைவு அறிக்கையின் பிரகாரம் சபையின் திருத்திய கணக்குகள் 2012 மே 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 5.1.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

I. அமைப்பு வரைபடம்
II. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு
III. மீளாய்வாண்டு தொடர்பான முறைமைத் திட்டம்

### 4.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமானது கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தது.

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

சபையினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவு தோற்றுவிக்கப்படாதிருந்த உரிய அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் 4 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் போது 3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

**4.6 கொள்வனவுத் திட்டம்**

சபையின் கொள்வனவுகளுக்காக திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்பட்ட விடயங்களை உள்ளபடியானவற்றுடன் ஒப்பிடும் போது 10% இலிருந்து 103% வரையையான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**4.8 ஆண்டறிக்கையினை வெளியிடுதல்**

சபையின் 2006 இலிருந்து 2009 வரையான ஆண்டறிக்கைகள் மீளாய்வாண்டின் போதும் 2012 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் ஆங்கிலப் பிரதி 2010 சனவரி மாதத்திலும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக உரிய அமைச்சிற்கு அனுப்பகைவ்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையங்களின் பயன்பாடு

(இ) நிதி மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்களின் பயன்பாடு

(உ) இருப்புக் கட்டுப்பாடும் ஏடுகளில் பதிவு செய்தலும்